| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.சா.சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | 1. முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மயிலாடுதுறை, மற்றும் காரைக்கால்<br>2. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.<br>3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண். 003781 /எப்1 /2022** **நாள் : 19.07.2022**

ஐயா/அம்மையீர்

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு, மே 2022 – விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II – விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வது மற்றும் விண்ணப்பத் தொகையினை ஆன்–லைன் மூலம் கருவூலத்தில் செலுத்துவது தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

பார்வை: அரசுத் தேர்வுகள் இயக்கக செய்திக்குறிப்பு நாள்: 19 .07.2022.

-----

மே 2022, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பாக விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் **20.07.2022** நண்பகல் 12.00 மணி முதல் தங்களது விடைத்தாள் நகல்களை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்ய பார்வையில் கண்டுள்ள செய்திக்குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அச்செய்திக்குறிப்பில் விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்யும் மாணவர்கள், மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கான விண்ணப்பத்தினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து **21 .07.2022 நண்பகல் 12.00 மணி முதல் 25.07.2022 மாலை 05.00 மணி வரை** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் / முதன்மைக்கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணத் தொகையை விண்ணப்பத்தோடு சேர்த்து ஒப்படைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதற்கேற்ப அனைத்து உதவி இயக்குநர்களும் / தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் புதுச்சேரி இணை இயக்குநர் (கல்வி) ஆகியோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மாவட்டத்தில் உள்ள தனித்தேர்வர்களிடமிருந்து மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II விண்ணப்பங்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்கள் மட்டுமே, மறுமதிப்பீடு (RV) / மறுகூட்டலுக்கு (RT-II) விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவார்கள்.

2. தேர்வர்கள் விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்தபின், அதே இணையதளத்தில் மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II –க்கான (RT-II) விண்ணப்பத்தையும் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்திலுள்ள கலங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் கட்டணத் தொகையோடு சேர்த்து அவ்விண்ணப்பத்தை உதவி இயக்குநர்கள் / முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைப்பார்கள்.

**<u>மறுமதிப்பீடு</u>**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.505/– |

**<u>மறுகூட்டல்–II</u>**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

3. உதவி இயக்குநர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் அலுவலகத்தில், தேர்வர்களிடமிருந்து மேற்கண்டவாறு விண்ணப்பங்களை பெற்றவுடன் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான USER ID & PASSWORD-ஐ பயன்படுத்தி **21.07.2022 முற்பகல் 10.00 மணி முதல் 25.07.2022 மாலை 05.00 மணி வரை** ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

4. **25 .07.2022 அன்று மாலை 6.00 மணியளவில்** மறுமதிப்பீடு /மறுகூட்டல்–II-க்கு விண்ணப்பித்தத் தேர்வர்களின் விவரங்களை (Summary Report) பதிவிறக்கம் செய்தல் வேண்டும். பின்னர், விண்ணப்பத்திற்கென்று பெறப்பட்ட தொகையினை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி ஆன்–லைன் மூலம் (e-challan Remittance) கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கான கட்டணத்தினையும் செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | Chennai |
| Treasury | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22731– Retotalling / Re-valuation |

5. மேற்கண்டவாறு தேர்வர்களின் விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கான கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் **(1)** செலுத்துச் சீட்டு **(Payment Receipt)** (2) மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II–ற்கு விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தேர்வர்களின் விவரங்கள் **(Summary Report)** மற்றும் (3) முதன்மைக் கல்வி அலுவலரின் / உதவி இயக்குநரின் கையொப்பமிடப்பட்ட (with Sign) கீழ்க்காணும் சான்றிதழ் **(Certificate)** ஆகியவைகளை இணைத்து திரு.ச.சீனிவாசன், துணை இயக்குநர் (பொது), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக **27.07.2022–க்குள்** அனுப்பி வைத்திட வேண்டும்.

<u>**சான்றிதழ்**</u>

மறுமதிப்பீடு / மறுகூட்டல்–II-க்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டது.

முதன்மைக் கல்வி அலுவலர் / உதவி இயக்குநர்
(அலுவலக முத்திரை)

**<u>இணைப்பு:</u>** விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கான கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்

ஒம்/–
இயக்குநர்

<u>நகல்</u>

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் } –தகவலுக்காக
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் } –தகவலுக்காக
3. தொழில்நுட்பப் பிரிவு (அலுவலகம்)
4. கண்காணிப்பாளர், அ3 பிரிவு (அலுவலகம்)